02.03.2024

E.A. No.1/2021 in E.P.No.6/2021 in O.S.No..87/2016

எஸ்தர் (P.W.1)

<u>குறுக்கு விசாரணை :</u>

1. எனக்கு தமிழ் எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியும். வழக்கு சொத்தை தவிர எனக்கு வேறு சொத்து எதுவும் இல்லை என்று சொன்னால் சரிதான். ம.சா.ஆ.8 -இல் உள்ள சொத்தில் வீடு ஒன்று உள்ளது என்றால் சரிதான். அது என்னுடைய பெயரில் தான் உள்ளது என்றால் சரிதான் ஆனால் எனது தங்கச்சியின் வீடாகும். ம.சா.ஆ.6-இல் நான் கட்சி அல்ல என்று சொன்னால் சரிதான். அவ்வாறெனில் ம.சா.ஆ.6-ஐ எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் மேற்படி ம.சா.ஆ.6-இல் உள்ள வாதிகள் ஏற்கனவே வழக்கு தாக்கல் செய்த விவரம் எனக்கு தெரியாது. வழக்கு சொத்தை வாங்கிய பிறகு தான் தெரிய வந்ததால் தான் ம.சா.ஆ.6-ஐ தாக்கல் செய்துள்ளேன். மனு சொத்திற்கும் ம.சா.ஆ.6-இல் உள்ள சொத்திற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரிதான். ம.சா.ஆ.7-இல் உள்ள சொத்திற்கும் இவ்வழக்கு சொத்திற்கும் சம்மந்தம் என்று சொன்னால் சரியல்ல. ம.சா.ஆ.6-இல் உள்ள தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அவ்வழக்கு நிலுவையில் உள்ளது.

2. ம.சா.ஆ.8-இல் உள்ள சொத்தில் நான் தான் அனுபவத்தில் இருக்கிறேனா என்றால் இல்லை எனது தங்கச்சி தான் உள்ளார். ம.சா.ஆ.6-இல் இதுவரை என்னை கட்சி சேர்க்கவில்லை என்றால் சரிதான். மேலும் ம.சா.ஆ.6-இல் உள்ள சொத்து என்னை தவிர வேறு யாருக்கும் உரிமைப்பட்டது என்று தீர்ப்போ, தீர்ப்பாணையோ இதுவரை பிறப்பிக்கப்படவில்லை என்று சொன்னால் சரிதான். அசல் வழக்கு எண்.87/2016 -ஆனது எனது சகோதரரின் மனைவி மற்றும் மக்கள் எனது சகோதரருக்கு எதிராக பராமரிப்பு கோரி தாக்கல் செய்யப்பட்ட வழக்கு 2016-ஆம் ஆண்டு முதல் நிலுவையில் இருந்த விவரம் தெரியுமா என்றால் எனக்கு தெரியும். வழக்கு பட்டிகை சொத்தை பற்றுகை செய்ய நீதிமன்றத்தில் இருந்து அமீனா வந்து அறிவிப்பை சொத்தில் ஒட்டினார் என்று சொன்னால் இல்லை ஆனால் அமீனா வந்தார். பட்டிகை சொத்தை நீதிமன்றம் பற்றுகை செய்த விவரம் தெரியுமா என்றால் தெரியும்.

3. மேற்படி பற்றுகை செய்த விவரம் தெரிய வந்தும் அது சம்மந்தமாக நான் அப்போது நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றால் சரிதான். நான் நடவடிக்கை எடுக்காததற்கு காரணம் பட்டிகை சொத்தை எனது சகோதரரான சேம்ராஜ்க்கு எழுதிக்கொடுத்து விட்டதால் தான் நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொன்னால் சும்மா எழுதி மட்டும் தான் வைத்தேன் ஆனால் போக்குவரவு எதுவும் செய்யவில்லை. பிர்ஸ்கில்லா என்பவர் எனது சகோதரி என்று சொன்னால் சரிதான். அவர் நீதிமன்றத்தில் வந்து சாட்சி சொல்ல வந்தார் என்று சொன்னால் சரிதான். அவரையும் என்னையும் சாட்சியம் அளிக்க எனது சகோதரர் தான் கூட்டி வந்தார் என்றால் சரிதான். எனது சகோதரர் அவரது பிள்ளைக்கு பராமரிப்பு தொகை கொடுக்ககூடாது என்ற எண்ணத்தில் தான் என் மூலம் இக்கோரிக்கை மனுவை தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. அசல் வழக்கு எண்.87/2016-இல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை படி எனது சகோதரர் அவரது குழந்தைக்கு பராமரிப்பு தொகை கொடுக்க கடமைபட்டுள்ளதாலும் மேலும் மேற்படி வழக்கில் இம்மனு பட்டிகை சொத்தானது பற்றுகை செய்யப்பட்டுள்ளதாலும் மேற்படி சொத்தானது ஏலத்திற்கு கொண்டு வந்து விற்பனை செய்து தீர்ப்பாணை தொகையை ஈடு செய்ய வேண்டியது என்று சொன்னால் சரியல்ல. ஆகையால் நான் இம்மனுவில் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கது அல்ல என்பதால் மனுவானது 1 மற்றும் 2 எதிர்மனுதாரர்களின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.